FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8348043

1. District : மாவட்டம் Dharmapuri PS: காவல்நிலையம் V & AC Year: ஆண்டு 2025 FIR No.: மு.த.அ. எண் 05/AC/2025 Date: நாள் 10.07.2025

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Act, 1988 as amended in 2018 Sections பிரிவுகள்: 7(a)
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் Date to : நாள் வரை 26.06.2025 at 16.15 hrs
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை 10.07.2025 at 10.00 hrs
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 10.07.2025 Time : நேரம் 15.00 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 15 H 9925198 Time : நேரம்

4. Type of Information : Written/ Oral / Electronic form : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம் Computer typed complaint

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் At the land of the Complainant, Alamarathupatti village, Maniyampadi post, Pappireddipatti Tk, Dharmapuri Dt, About 2.0 kms east
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம் —

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் R. Elaiyaraja (b) Father's/ Husband's Name தந்தை / கணவர் பெயர் Tr. Ramasundaram
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 33/2025 (d) Nationality : நாட்டினம் Indian (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் —
Date of Issue : வழங்கப்பட்ட நாள் — Place of Issue : வழங்கப்பட்ட இடம் —
(f) Occupation : தொழில் Farmer (g) Address : முகவரி D. No. 5/147, Alamarathupatti Village, Maniyampadi Post, Pappireddipatti Taluk, Dharmapuri District.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
Tr. Vijayakumar, Surveyor, Maniyampadi Revenue Village, Pappireddipatti Taluk, Dharmapuri District.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
—

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

—

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate Sheet enclosed herewith

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

10/07/2025

10/07/25

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

G. PERUMAL

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

11.07.2025 at 08.30 hrs

Name: பெயர் .....
Rank: நிலை INSPECTOR OF POLICE, No. எண் ...
V & AC,
DHARMAPURI

தருமபுரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.5/AC/2025, u/s 7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் காலம் 12–ன் தொடர்ச்சி.

*****

இன்று 10.07.2025-ஆம் தேதி வியாழக்கிழமை மாலை 15.00 மணிக்கு காவல் ஆய்வாளராகிய நான் நிலையத்தில் இருந்தபோது, தருமபுரி மாவட்டம், பாப்பிரெட்டிப்பட்டி வட்டம், மணியம்பாடி அஞ்சல், ஆலமரத்துப்பட்டி கிராமம், கதவு எண்.5/147-ல் வசிக்கும் இராமசுந்தரம் மகன் திரு.R.இளையராஜா, வயது 33 என்பவர் அலுவலகம் வந்து கணினி மூலம் தட்டச்சு செய்யப்பட்டிருந்து கொடுத்த `எழுத்து மூலமான புகாரின் விவரம் பின்வருமாறு.

நான் தருமபுரி மாவட்டம், பாப்பிரெட்டிப்பட்டி வட்டம், மணியம்பாடி அஞ்சல், ஆலமரத்துப்பட்டி கிராமத்தில் குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். நான் 10–ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். எனது அப்பாவிற்கு ஜெகதா, ஜெயபிரியா ஆகிய இரண்டு பெண்களும், நானும் வாரிசுகள் ஆவோம். எனது அப்பா திரு.இராமசுந்தரம் பெயரில் மணியம்பாடி கிராம பட்டா எண்.1389 சர்வே எண்.205/1B2–ல் 4.33 ஏக்கரும், பட்டா எண்.2142 சர்வே எண்.208/1A மற்றும் பட்டா எண்.2143 சர்வே எண்.208/4A–ல் 1.16 ஏக்கரும் மொத்தம் சுமார் 5 ½ ஏக்கர் பூர்விக விவசாய நிலம் இருந்தது. அதில் கடந்த 17.06.2025–ம் தேதி கடத்தூர் சார்பதிவாளர் அலுவலக ஆவண எண்.1330/2025–ன்படி சுமார் 3.83 ஏக்கர் நிலம் எனக்கும், எனது அக்கா திருமதி.ஜெயபிரியாவிற்கு 1 ஏக்கர் நிலமும், மேலும் பொதுவில் எனக்கும், எனது அக்கா ஜெயபிரியாவிற்கு 16 சென்ட் நிலமும் பாகப்பிரிவினை பத்திரம் செய்யப்பட்டது. எனது அக்கா ஜெகதா அவர்களுக்கு நிலத்தில் பாகம் கொடுக்க வேண்டும். ஆனால் எனது அக்கா ஜெகதா மகள் ஐஸ்வரியாவை நான் திருமணம் செய்துக் கொண்டதால், எனது அக்கா ஜெகதாவுக்கு கொடுக்க வேண்டிய 50 சென்ட் நிலத்தை, எனது மனைவி ஐஸ்வரியாவுக்கு எனது அப்பா இராமசுந்தரம் அவர்கள் தான செட்டில்மென்ட் ஆவணை எண்.1329/2025–ன்படி பத்திரம் பதிவு செய்து கொடுத்தார். கடந்த 26.06.2025–ம் தேதி சாயங்காலம் சுமார் 03.45 மணியளவில் செல்போன் எண்.7010107924–லிருந்து எனது செல்போன் எண்.7010929582–ற்கு போன் செய்தவர் அவரது பெயர் விஜயகுமார் என்றும், மணியம்பாடி கிராமத்திற்குண்டான சர்வேயர் என்றும், கடத்தூர் பத்திர பதிவு அலுவலகத்தில் பதிவு செய்த உங்களது நிலத்தை அளந்து அவரவரது பெயரில் தனிப்பட்டா வழங்க ஆன்லைனில் விண்ணப்பம் பெறப்பட்டுள்ளது என்றும், நான் உங்களது நிலத்தை அளக்க வரவேண்டும். நீங்க எங்கு இருக்கிறாய் என்று கேட்டார். அதற்கு நான் கடத்தூர் டவுனில் இருக்கிறேன்

என்று சொன்னேன். அதற்கு சர்வேயர் உனது நிலம் எங்கு இருக்கிறது என்று எனக்கு தெரியாது. நான் தற்போது கடத்தூர் சர்வேயர் குவார்ட்ரஸ்ஸில் இருக்கிறேன். நீ என்னை அழைத்துக் கொண்டு போய் ஆலமரத்துப்பட்டியில் உள்ள உங்களது நிலத்தை காட்டுமாறு என்னிடம் கேட்டார். அதன்படி, நான் கடத்தூர் சர்வேயர் குவார்ட்ரஸ் சென்று சர்வேயர் திரு.விஜயகுமார் அவர்களை எனது நிலத்திற்கு அன்று மாலை சுமார் 4.15 மணிக்கு அழைத்து சென்றேன். அங்கு எங்களது நிலத்தை பார்த்த சர்வேயர் என்னிடம், உனது நிலம், உனது அக்கா ஜெயபிரியா நிலம், உங்களது பொதுநிலம் மற்றும் உனது மனைவி ஐஸ்வரியா நிலம் ஒவ்வொன்றையும் அடையாளம் காட்டுமாறு கேட்டார். அதன்படி, நானும் அவருக்கு அடையாளம் காட்டினேன். அவர் அந்த நிலங்களை பார்த்துவிட்டு, FMB-ல் உள்ளவாறு உங்களது நிலத்தை அளந்து தனித்தனியாக மூன்று பட்டா வழங்க ஏற்பாடு செய்து தருகிறேன் என்றும், அதற்கு ஒவ்வொரு பட்டாவிற்கும் ரூ.4,000/–ம் வீதம் மொத்தம் ரூ.12,000/–ம் தனக்கு தனியாக கொடுக்க வேண்டும் என்று என்னிடம் கேட்டார். அதற்கு நான் சார் அவ்வளவு பணம் என்னால ரெடி பண்ணமுடியாது. கொஞ்சம் குறைத்து சொல்லுங்கள் என்று கேட்டேன். அதற்கு அவர், 5 நாட்கள் கழித்து அவரிடம் போனில் பேசுமாறு சொன்னார். அதன்படி, நான் 01.07.2025 தேதி காலை சுமார் 11.10 மணிக்கு எனது செல்போனிலிருந்து சர்வேயர் திரு.விஜயகுமார் செல்போனுக்கு பேசியபோது, அவர் அப்போது வேலையாக இருப்பதாகவும், அன்று சாயங்காலம் பேசுமாறு சொன்னார். அதன்படி நான் அன்று சாயங்காலம் சுமார் 06.10 மணிக்கு சர்வேயர் திரு.விஜயகுமாரிடம் போனில் பேசினேன். அப்போது அவர், அவருக்கு ஆபிசில் நிறைய வேலை கொடுத்துள்ளதாகவும், அதனால் 7 அல்லது 8 நாட்கள் கழித்து, மீண்டும் அவரிடம் போனில் பேசுமாறும், அதற்குள் வேலையை முடித்துவிடுவதாகவும் சொன்னார். அதன்படி, நான் 09.07.2025–ம் தேதி காலை 08.15 மணிக்கு எனது செல்போனிலிருந்து சர்வேயர் விஜயகுமார் செல்போனுக்கு போன் செய்து எங்களது தனிப்பட்டா குறித்து கேட்டேன். அப்போது அவர் ஒன்னும் பிரச்சனை இல்லை. தனிப்பட்டா கொடுத்துவிடலாம் என்றும், நாளை 10.07.2025 தேதி காலை அவருக்கு போன் செய்யுமாறு சொல்லி போனை வைத்துவிட்டார். அதன்படி நான் 10.07.2025 தேதி காலை சுமார் 10.00 மணிக்கு சர்வேயர் விஜயகுமார் செல்போனுக்கு போன் செய்தேன். அப்போது அவர் தான் ஏற்கனவே கேட்டவாறு ஒவ்வொரு பட்டாவிற்கும் தலா ரூ.4000/–ம் வீதம் மூன்று பட்டாவிற்கு ரூ.12,000/–ம் கொடுத்துவிடு என்றார். அதற்கு நான் சார் அவ்வளவு பணம் இல்லை என்றும், விவசாயத்தில் வருமானம் இல்லை, கொஞ்சம் குறைத்து சொல்லுங்க என்று கெஞ்சி கேட்டபோது, சர்வேயர் விஜயகுமார் சரி அதில் ரூ.2000/–ம் குறைத்து ரூ.10,000/– ரெடிபண்ணி கொடு என்றும், ஆபிசில் உள்ளவர்களுக்கு கொடுக்க வேண்டும் என்றும், ரூ.10,000/– ரெடிபண்ணிட்டு எப்ப வேண்டுமானாலும்

தனக்கு போன் செய்யுமாறும், தான் சொல்லும் இடத்திற்கு வந்து பணத்தை கொடுக்குமாறும் சொன்னார். மணியம்பாடி வருவாய் கிராமத்திற்குண்டான சர்வேயர் திரு.விஜயகுமார் அவர்கள் லஞ்சமாக கேட்ட பணம் ரூ.10,000/–ஐ கொடுக்க எனக்கு விருப்பம் இல்லை. எனவே, மணியம்பாடி வருவாய் கிராமத்திற்குண்டான சர்வேயர் திரு.விஜயகுமார் அவர்கள் என்னிடம் லஞ்சமாக கேட்ட பணம் ரூ.10,000/–த்துடன் நாளை 11.07.2025–ம் தேதி அவரை சந்திக்க தயாராக உள்ளேன். எனவே, மணியம்பாடி வருவாய் கிராமத்திற்குண்டான சர்வேயர் திரு.விஜயகுமார் அவர்கள் மீது சட்டப்படியான நடவடிக்கை எடுக்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு ஒப்பம் ரா.இளையராஜா, 10.07.2025 Madam, Received the computer typed written complaint on 10.07.2025 at 15.00 hrs. Further, a confidential verification on the general reputation of the accused and whether the informant has motive with him personally was verified and found that the reputation of accused is learnt to be not good and nothing adverse against the informant and the information given in his computer typed written complaint is genuine. Therefore, a case in Dharmapuri V&AC, Cr.No.05/AC/2025, u/s 7 (a) of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 was registered today 10.07.2025 at 15.45 hrs against Tr.Vijayakumar, Surveyor, Maniyampadi revenue village, Pappireddipatti Tk, Dharmapuri Dt. The original FIR and the computer typed written complaint of the informant have been sent to the Hon'ble Court of the Principal District and Sessions Judge, Dharmapuri and remaining copies are sent to the officers concerned.

10/07/2025

(G.PERUMAL)
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Dharmapuri.